தமிழகத்தின் தலைசிறந்த மூத்த ஆலிம்களுள் ஒருவரும் ஷாதுலிய்யா தரீகாவின் கலீஃபாவுமான சங்கைக்குரிய ஆரிஃப்பில்லாஹ் மௌலானா மௌலவி அல்ஹாஜ் **K.M. முஹம்மது யாஸீன் ஆலிம்** அவர்கள் வழங்கிய...

வாழ்த்துரை

ஹாபிஸ், மவ்லவி, **M.K.** முஹம்மத் காஸிம் மஹ்ளரி அவர்களுடைய "உம்மி நபி ஓர் ஆய்வு" கட்டுரை அறிந்தேன். பல்வேறு ஆதாரங்களுடன் திரட்டப்பட்டுள்ள அற்புதமான இந்த ஆய்வுக்காக அவருக்கு என் இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். துஆ செய்கிறேன்.

இதை பொதுமக்கள் படித்துப் பயனடைய அன்புடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

முஹம்மத் யாஸீன் ஆலிம்

யாஹுஸைன் தைக்கால் தெரு.
நாகூர் ஷரீஃப்
17.10.2003
வெள்ளிக்கிழமை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

கருணைக்கடல், காருண்யசீலர், சன்மார்க்கத் தூதர், உலகை உய்விக்க வந்த உத்தம நபி நாதர் அண்ணல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அறிவுத் திறன் பற்றி, எல்லாம் வல்ல இறைவன் தித்திக்கும் தனது திருமறையில் சொல்கிறான். وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ تَعْلَمُ நபியே ! நீங்கள் அறியாத அனைத்தையும் அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத் தந்தான். (அல்குர்ஆன். 4:113)

இந்தியா முழுவதும் எல்லா அரபிக்கல்லூரிகளிலும் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டுள்ள மிஷ்காத்துல் மஸாபீஹ் எனும் ஹதீஸ் கலை நூலில் 560 ம் பக்கத்தில் அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்த ஹதீஸ் ஒன்று அன்னை ஆயிஷா நாயகி (ரலி) அறிவித்ததாக இடம் பெற்றுள்ளது. அதாவது ஒருமுறை 14-ம் பிறை பூரணச் சந்திரன் இரவன்று இருலோக சர்தார் எம்பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என் மடிமீது தலை வைத்திருந்தார்கள். அப்போது நான் "யாரசூலல்லாஹ் ! வானத்து நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக யாராவது நற்செயல்கள் செய்துள்ளனரா ? என்று கேட்டேன். ஆம் ஒருவர் உள்ளார் ; அவர்தான் உமர் என்று உத்தம நபியார் உடன் பதிலிறுத்தார்கள்.

"அப்படியாயின் அபூபக்கர் அவர்களின் நன்மைகள் எங்கே போயின?" என்று கேட்டேன். உமர் அவர்களின் அத்துணை நன்மைகளும், அபூபக்கர் அவர்களின் நன்மைகளில் ஒரே ஒரு நன்மையைப் போன்றது தான், என்று கோமான் நபி அவர்கள் தன் குமுதவாய் திறந்து கூறினார்கள்.

(அறிவிப்பு ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள்)

வானத்து நட்சத்திரங்களின் அளவுக்கு சமமாக இன்ன மனிதர் அமல் செய்திருக்கிறார் என்று ஒருவர் சொல்ல வேண்டும் என்றால், அவர் அனைத்து வானங்களின் மூலை முடுக்கெல்லாமுள்ள நட்சத்திரங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதை தெரிந்தவராகவும், இவ்வுலகிலுள்ள அனைத்து நாடுகளையும் ஒவ்வொரு நாட்டின் மூலை முடுக்குகளில் வணங்குவோரையும், இனிமேல் பிறக்கும் அனைத்து மனிதர்களின் அமல்களையும் அறிந்தவராகவும் இருக்க வேண்டும்.

ஏனெனில் எல்லா நாட்டிலும் வணக்கசாலிகள் உள்ளனர். இவை மட்டுமல்ல பகலின் வெளிச்சத்திலும் இரவின் கும்மிருட்டிலும், திறந்த வெளியிலும், பூட்டிய அறைக்குள்ளும் இபாதத் செய்யும் கோடானகோடி மாந்தரின் அமல்கள் அனைத்தையும் அறிந்தவராகவும் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட அறிவுத்திறன் இருப்பவர் மட்டும்தான் ஹஜ்ரத் ஆயிஷா நாயகியின் வினாவுக்கு விருட்டென விடையளிக்க முடியும். எனவே கற்பிற் சிறந்த காரிகை அன்னை ஆயிஷா நாயகியின் கேள்விக்கு உடன் பதிலிறுத்த பெருமானாரின் பேரறிவை எண்ணிப்பாருங்கள்.

ஆயிஷா ! நீ மிகக் கடினமான கேள்வியைக் கேட்டுவிட்டாயே, எனக்கென்ன தெரியும் ? சற்று பொறு. ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வரட்டும் அவர்களிடம் கேட்டுச் சொல்கின்றேன் ; என்று நபி அவர்கள் கூற வில்லை.அல்லது ஓ ஆயிஷா! பேனாவும், பேப்பரும் கொண்டு வா, நான் நட்சத்திரங்களையும் மனிதர்களின் அமல்களையும் கணக்கிட்டுச் சொல்கிறேன். என்றும் நபி (ஸல்) அவர்கள் சொல்லவில்லை. அல்லது ஆயிஷா! எனக்கு சிறிது காலஅவகாசம் கொடு! நான் யோசித்து சொல்கிறேன் என்றும் நபி (ஸல்) அவர்கள் சொல்லவில்லை கேட்ட கேள்விக்கு தரமான பதிலை தாமதமின்றி தந்த தாஹா நபியின் தூய அறிவுக்கு நிகராக தரணியிலும் எவரேனுமுண்டோ?

அவர்களுக்குத் தெரியாத எந்தக் கல்வியும், எக்கலையும் துன்யாவில் இல்லை.

விஷயம் இவ்வாறிக்க ஏந்தல் நபி (ஸல்) அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது. ஏனெனில் அவர்கள் உம்மி நபி என்று சிலர் அறியாதவர்களாக எழுதியும் பேசியும் வருகின்றனர்.

ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை இறைவன் படிக்காத மக்களிடையே ரசூலாக அனுப்பினான். (அல்குர்ஆன்-62:2)

அண்ணல் நபி அவர்கள் எந்த மக்காவில் அனுப்பப்பட்டார்களோ அந்த மக்காவின் மக்கள் எழுதப்படிக்க தெரியாதவர்களாக இருந்தனர். என்பதை இந்த ஆயத்திலிருந்து நாம் அறிகிறோம். எனவே நபி (ஸல்) அவர்களை "உம்மி" என்று சொல்கிறோம்.

உத்தம நபி அவர்களை உம்மி என்று நாம் சொல்வதற்கு மூன்று பொருட்கள் உள்ளன.

1. மேற்கண்ட 62:2 வது வசனத்தின்படி உம்மி என்பது படிக்காத கூட்டத்தாரிடையே அனுப்பட்ட ரசூலுக்கு சொல்லப்படும்.

2. மக்காவிருந்துதான் உலகம் உருவாக்கப்பட்டது. எனவே அதை சுட்டிகாட்ட أُمّ الْقُرٰى உம்முல் குறா நகரங்களின் தாய் எனும் பட்டப்பெயர் திருமக்காவுக்கு உண்டு. ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்முல் குறாவில் (மக்காவில்) பிறந்ததால் உம்மி உன்று சொல்கிறோம். அதாவது உம்முல் குறாவை (மக்காவை) சார்ந்தவர் என்று பொருளாகும்.

3. உம்மு எனும் சொல்லுக்கு அரபியில் தாய் என்று பொருளாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயாரின் கருவறையிலிருக்கும் போதே தந்தையார் ஹஜ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டதால், நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய தாயைச் சார்ந்துதான் வாழ்ந்தார்கள்! அந்தக் கருத்தை சுட்டிக்காட்டத்தான் உம்மி என்று சொல்கிறோம். அதாவது தாயைச் சார்ந்தவர் என்று பொருள்.

ஆதாரம். தப்ஸீர் நூருல் இர்பாஃன்- பக்கம்- 884.

மேற்கூறிய விளக்கத்தின் படி :-

1. படிக்காதவர்களிடையே அனுப்பப்பட்ட ரசூல்
2 மக்காவை சார்ந்தவர்
3. தாயை சார்ந்தவர்

இந்த மூன்று விளக்கங்களும் உம்மி என்பதற்கு பொருந்தும். மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும் என்பதை ஸஹீஹுல் புகாரியிலே வரும் கீழ்காணும் ஹதீஸ் அறிவிப்பதைப் பாருங்கள்.

ஹிஜ்ரி 6-ம் ஆண்டு ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துல்கஃதா மாதம் திங்கட்கிழமை தமது தோழர்களோடு உம்ரா செய்வதற்கு புனித மக்கா நோக்கிச் சென்ற போது. ஹுதைபிய்யா என்னுமிடத்தில் குரைஷி காஃபிர்களுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று நடந்தது. இது அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தம் என்று. ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழுதினார்கள். உடனே காஃபிர்கள் நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அதை ஏற்றிருப்பின் நாங்கள் உங்களைத் தடுத்து நிறுத்தியிருக்க மாட்டோம். எனவே அல்லாஹ்வின் தூதர் என்று எழுதக்கூடாது. என்று ஆட்சேபித்தனர்.

உடனே நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களை நோக்கி "அலி! அதை அழி! என்று சொன்னார்கள். அல்லாஹ் மீது ஆணையாக ஒரு போதும் நான் தாங்களை (திருத்தூதர் என்னும் வாசகத்தை) அழிக்க மாட்டேன் என்று ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு அந்த உடன்படிக்கை கடிதத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கி அந்த வாசகத்தை தனது திருக்கரத்தால் தாங்களாகவே அழித்தார்கள். அழித்த பின்னர் "இது அப்துல்லாஹ்வின் குமாரர் முஹம்மது செய்து கொள்ளும் சமாதான ஒப்பந்தமாகும்" என்று எழுதினார்கள். அறிவிப்பு : ஹஜ்ரத் பறாவு இப்னு ஆஸிப் (ரலி) ஆதார நூல்கள். புகாரி. பாகம் 1 பக்கம் 372. புகாரி பாகம் 2 பக்கம் 610. உம்ததுல் காரி. பாகம் 14 பக்கம் 272. மிஷ்காத் பக்கம் 355. மிர்ஆத் ஷரஹ் மிஷ்காத் பாகம் 5. பக்கம் 623. ஃபத்ஹுல் பாரி பாகம் 7 பக்கம் 626: புகாரி தமிழ் மொழியாக்கம் பாகம் 3. பக்கம் 336 வெளியீடு : ரஹ்மத் அறக்கட்டளை. சென்னை.

இந்த ஹதீஸின் பின்னணியில் தொக்கி நிற்கும் பாடம் என்னவெனில். எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். அவர்கள் எழுதியது மாபெரும் முஃஜிஸா (அற்புதம்) ஆகும். ஏனெனில் அவர்கள் இதுவரை யாரிடமும் எழுதக் கற்றுக் கொள்ளவில்லை. இதுவரை எழுதியதுமில்லை முதல் முறையாக இப்போதுதான் எழுதினார்கள். அவர்களுக்கு எழுத வேண்டிய கட்டாயம் இது காறும் ஏற்படவில்லை. இப்போதுதான் ஏற்பட்டது.

وَمَا كُنْتَ تَتْلُوْ مِنْ قَبْلِهِ مِنْ كِتَابٍ وَّلَا تَخُطُّهُ
بِيَمِيْنِكَ إِذًا لَّارْتَابَ الْمُبْطِلُوْنَ

நபியே! இதற்கு முன்னர் நீங்கள் எந்த வேதத்தையும் ஓதிக்கொண்டிருக்கவில்லை. உம்முடைய வலக்கரத்தால் அதனை நீர் எழுதியவருமல்லர். அப்படியிருப்பின் அசத்தியவான்கள் (உம்மை) சந்தேகித்திருப்பர். (அல்குர்ஆன் 29:48)

இந்த ஆயத்திலிருந்து எம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாதென்று சிலர் தவறாக விளங்கி வைத்திருக்கிறார்கள். "இதற்கு முன்னர் (நுபுவத்திற்கு முன்னர்) எந்த வேதத்தையும் நீங்கள் ஓதிக்கொண்டிருக்கவில்லை" என்றுதான் இந்த வசனத்தில் இறைவன் சொல்கிறானே தவிர ஓதத் தெரியாது என்று எங்கே சொல்கிறான்? அப்படி ஒரு வாசகம் குர்ஆனில் இல்லையே. இதை நாம் விளங்க வேண்டும். குர்ஆனில் யதார்த்த விளக்கத்தை அல்லாஹ் நமக்கு தருவனாக!

ஹுதைபிய்யாவில் நபி (ஸல்) அவர்கள் எழுதியது நுபுவத்திற்கு 18 ஆண்டுகளுக்கு பின்னர் என்பதை நாம் புரிய வேண்டும். நுபுவத்திற்கு முன் நபி எழுதவில்லை என்று குரஆன் கூறுகிறது.

நுபுவ்வத்திற்கு பிறகு நபி எழுதினார்கள் என்று ஹதீஸ் சொல்கிறது. எனவே குர்ஆனும் ஹதீஸும் முன்பின் முரணான கருத்தைக் கூறவில்லை. இரண்டும் இரண்டு காலத்தை கூறுகின்றன.

இதோ. இன்னொரு ஹதீஸ். உத்தம நபி (ஸல்) அவர்கள் உடல் நலம் குன்றி உலகை விட்டுப் பிரிகின்ற காலம் நெருங்கியபோது "எழுதுகோலைக் கொண்டு வாருங்கள். உங்களுக்கு சில விஷயங்களை எழுதி தருகிறேன். அதன்பிறகு நிச்சயமாக நீங்கள் வழி தவறமாட்டீர்கள்" என்று தோழர்களிடம் சொன்னார்கள். அப்போது ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும் வேறு சில ஸஹாபிகளும் "அல்லாஹ்வின் தூதர் அவர்கள் உடல் நலம் குன்றியிருக்கும் இந்நேரத்தில் அவர்களிடம் பேனாவையும் பேப்பரையும் கொடுத்து அவர்களை நாம் மேலும் சிரமத்திற்குள்ளாக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். ஆனால் வேறு சில சஹாபாக்கள் பேப்பரையும், பேனாவையும் கொடுங்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நமது நலனுக்காக சில விஷயங்களை எழுதித்தருவார்கள்." என்று சொன்னார்கள்.

கொடுங்கள் என்றும் கொடுக்காதீர்கள் என்றும் ஒவ்வொருவரும் பேசிக் கொண்டிருப்பதால் கருத்து வேற்றுமையும் சப்தமும் அங்கே மிகைத்தன. அப்போது "நீங்கள் இங்கிருந்து எழுந்து புறப்படுங்கள்" என்று ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பு ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) நூல்கள் : புகாரி. பாகம்-1. பக்கம் 22. புகாரி. தமிழ் மொழியாக்கம் பாகம்-1, பக்கம் 118. பத்ஹுல் பாரி பாகம் 1. பக்கம் 168. மிஷ்காத் பக்கம் 548. மிர்ஆத் ரஹ் மிஷ்காத். பாகம் 8 பக்கம்- 296 மற்றும் முஸ்லிம். முஸ்னதெ அஹ்மதிலும் இந்த நபிமொழி இடம் பெற்றுள்ளது.

மேற்கண்ட நபிமொழியில் உங்களுக்கு நான் எழுதிக் தருகிறேன். என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். "எழுதத் தெரிந்தவர் தானே எழுதுகிறேன்" என்று சொல்ல முடியும்.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நான் أنا مدينة العلم وعلي بابها கல்வியின் பட்டணம்; அலீ அதன் தலைவாயில்" என்று சொன்னார்கள். கல்வியின் பட்டணத்திற்கே எழுதவும் படிக்கவும் தெரியாதென்றால் கல்வியின் பட்டணமென்று எப்படிச் சொல்ல இயலும். ஏனெனில் எழுதுவதும் படிப்பதும் கல்வியின் இன்றியமையாத இரு அம்சங்களல்லவா?

எம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாதெனில் எழுதப் படிக்கத் தெரிந்த நாம், இவ்விஷயத்தில் அவர்களைவிட உயர்ந்தவர்களாகின்றோமே. இது முடியுமா? நவூதுபில்லாஹ். அல்லாஹ் காப்பானாக.

மாநிலத்திற்கோர் மணிவிளக்காய் வந்துதித்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது 40 ஆம் வயதில் ஹிரா குகையில் தனித்திருந்து தவம் செய்தபோது வானவர்கோமான் ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் இக்ரஃ ஓதுங்கள் என்று சொன்ன போது மாஅன பிகாரியின் "நான் ஓதுபவன் அல்ல" என்று நபி அவர்கள் பதில் தந்தார்கள். மாஅன பிகாரியின் என்பதற்கு எனக்கு ஓதத்தெரியாததென்று நபி அவர்கள் சொன்னதாக சிலர் பொருள் சொல்கிறார்கள். எழுதுகிறார்கள். அது தவறு. مَا أَنَا بِقَارِئٍ நான் ஓதுபவன் அல்ல என்பதன் கருத்தாவது ஜிப்ரயீலே! வஹீ கொண்டுவரும் நீங்கள் தான் முதலில் ஓத வேண்டும். அதை நான் கவனத்துடன் கேட்க வேண்டும். என்று நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள். ஏனெனில் வஹீ கொணர்ந்த ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூன்று முறையும் இக்ரஃ பிஸ்மி ரப்பிகல்லதீ... என்று 5 வசனங்களை தொடர்ந்து ஓதினார்கள். ஆதாரம்: மிஷ்காத். வால்யூம் 8. பக்கம்.95 ஆசிரியர்: அல்லாமா. முஃப்தி அஹ்மத்யார்கான் (ரஹ்) அவர்கள்.

ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை தனது துணைவிமார்களின் இல்லங்களுக்கு ஒரு மாதம் வரை போகமலிருந்தார்கள். அது சமயம் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் مَا أَنَا بِدَاخِلٍ عَلَيْهِنَّ "மாஅன பிதாகிலின்" நான் என் துணைவிமார்களிடம் செல்பவன் அல்ல. என்று சொன்னார்கள் நூல்: புகாரி. பாகம் 2. பக்கம் 782. புகாரி தமிழாக்கம் பாகம் 5. பக்கம் 970.

எனதருமைச் சகோதரர்களே ! இங்கே நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், ஹஜ்ரத் ஜிப்ரயில் (அலை) அவர்களிடம் சொன்ன மாஅனபிகாரியின் எனும் வாசகத்தை போலவே அதே அமைப்பில் (وزن) مَا أَنَا بِدَاخِلٍ மாஅன பிதாகிலின் என்று உமர் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள். மாஅன பிதாகிலின் என்பதற்கு"என் துணைவிகளிடம் எனக்கு போகப் தெரியாது" என்று அர்த்தம் செய்வது எப்படித் தவறோ அது போலவே மாஅன பிகாரியின் என்பதற்கு எனக்கு ஓத தெரியாது என்று அர்த்தம் செய்வது தவறாகும்.

சென்னை ரஹ்மத் அறக்கட்டளை சார்பில் வெளியிடப்பட்ட ஸஹீஹுல் புகாரி தமிழாக்கம் பாகம் 1 பக்கம் 3.4-ல் மாஅன பிகாரியின் என்பதற்கு எனக்கு ஓதத்தெரியாது என்று தவறாக பொருள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஹஜ்ரத் பாவா ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டு கண் திறந்ததும் சொர்க்க வாசலில் எழுதப்பட்டிருந்த லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் எனும் திருவாசகத்தைப் படித்தார்கள். பின்னர் அந்த முஹம்மதின் திருபொருட்டால் தம்மை மன்னிக்கும்படி இறைவனிடம் பிராத்தித்தார்கள். (நபி மொழி) நூல்கள் தஃப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் 1 பக்கம் 113. ஆயத்து, ஃபதலக்கா ஆதமுமிர்ரப்பஹி, தஃப்ஸீர் நயீமி பாகம் 1. பக்கம் 338 மற்றும் சுப்ஹான மவ்லிது உடைய முதல் ஹிகாயத்து!

எனதருமைச் சகோதரர்களே! சிந்திப்பீர். ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் அலிஃப் பே படிக்காமல் எப்படி அரபி படித்தார்கள் ? இதையெல்லாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தவன் அல்லாஹ். (அல்குர்ஆன் 2:31)

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு படிக்கக் கற்று கொடுத்த இறைவன், தனது ஹபீபாகிய ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு படிப்பறிவை பயிற்றுவிக்காமல் அறியாமையில் விட்டு வைப்பானா?

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு மொத்தம் ஏழு லட்சம் மொழிகள் தெரியும். (நபிமொழி) நூல். தஃப்ஸீர் ரூஹுல் பயான். வால்யூம் 1. பக்கம் 100 ஆயத்து: வஅல்லமா ஆதமல் அஸ்மாஅ

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுகது 7 லட்சம் மொழிகள் தெரியும் என்றால், எம்பெருமானார் ரசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு எத்தனை மொழி தெரியும். எத்தகு ஞானம் இருக்கும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். ஏனெனில் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களின் இத்துணை பெரிய இல்மும் (கல்வியும்) எம்பெருமானார் (ஸல்) அவர்களின் இல்மு எனும் கடலின் ஒரு துளிதான், எனவேதான் அல்லாஹ் சொன்னான். நபியே! உங்களுக்கு நீங்கள் அறியாத அனைத்தையும் அவன் கற்றுத் தந்தான். (அல்குர்ஆன் 4:113)

ஏந்தல் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன், எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுத்ததுடன் எல்லாம் கற்றுக் கொடுத்தான் எனும் கருத்தை இந்த வசனம் உள்ளடக்கி நிற்கின்றது. எனவே இது குறித்து சிந்திப்போம்; செயல்படுவோம்.

மேலும் مَسْئَلَةُ الْحِكَمِ அஸ்அலத்துல் ஹிக்கம் எனும் நூலில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தஃப்ஸீர் ரூஹுல் பயானில் ஓர் குறிப்பு காணப்படுகிறது. அதாவது எம்பெருமானார் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எழுதத் தெரிந்தவர்களாவே இருந்தார்கள். மேலும் எழுத்துக் கலையை பிறருக்கு அறிவிப்பார்கள்.

நூல். ரூஹுல் பயான். வால்யூம் 6. பக்கம். 480

ஆயத்து : وَمَا كُنْتَ تَتْلُو வமா குன்த்த தத்லூ.

ஹஜ்ரத் நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அவர்கள் பொதுவாக எழுதாமலிருந்ததற்கான காரணம் என்னவெனில் அவர்கள், அல்லாஹ் உடைய திருப்பெயரை எழுதும் போது, தன் விரல் உயர்ந்து விடுவதையும், அல்லாஹ் எனும் உயர் திருநாமம் தன் விரலுக்கு கீழே ஆகிவிடுவதையும் அவர்கள் விரும்பவில்லை. மேலும் அல்லாஹ் எனும் உயர் திரு நாமத்தை எழுதும் போது அந்த திருநாமத்தின் மீது தனது பேனாவின் நிழல் விழும். அதையும் கூட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் விரும்பவில்லை.

தனது ஹபீபாகிய முஹம்மத் صلى الله عليه وسلم அவர்கள் தனது பெயருக்கு செய்யும் இவ்வுயர் மரியாதையைக்கண்ட இறைவன், எனது ஹபீபே! உங்கள் திருமேனியின் நிழல் தரையில் வீழ்ந்து கால்களால் மிதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. இன்னும் உங்கள் குரலுக்கு மேலே மற்றவர்களின் குரல் உயரலாகாது. அதை யான் விரும்பவில்லை என்று அல்லாஹ் சொன்னான்: இவ்வாறு ஹஜ்ரத் நைஸாபூரி (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்.

ஆதாரம். நூல். ரூஹுல் பயான். பாகம் 6. பக்கம் 480.

ஆயத்து : وَمَا كُنْتَ تَتْلُوْ வமாகுன்த்த தத்லூ.

قال عثمان رضى الله عنه ان الله ما اوقع ظلك على الارض لئلا يضع انسان قدمه على ذالك الظل ۱۲ تفسير مدارك ج ۲ ص ۱۰۳

ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஒருமுறை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நோக்கி " யாரஸுலல்லாஹ் நிச்சயமாக இறைவன், எவரும் உங்கள் நிழலை மிதித்திடக்கூடாதென்பதற்காக உங்களுக்கு நிழலே இல்லாமலாக்கி விட்டான், என்று சொன்னார்கள்.

நூல். தஃப்ஸீர் மதாரிக். பாகம் 2. பக்கம் 103.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நிழல் கிடையாது என்பதற்கு وَاجْعَلْنِيْ نُوْرًا இறைவா! என்னை நீ ஒளியாக-வெளிச்சமாக ஆக்குவாயாக! என்று நபி அவர்கள் செய்த துஆவும் சான்றாகும் என்று சான்றோர்கள் சொல்கிறார்கள்

நூல். கஸாயிஸ குப்றா. பாகம் 1. பக்கம் 68.

حضرت شیخ عبد الحق محدث دہلوی رحمۃ اللہ علیہ فرماتے ہیں کہ حضور صلی اللہ علیہ وسلم کا سایہ نہ سورج کی دھوپ میں پڑتا تھا نہ چاند کی چاندنی میں ۔ مدارج النبوۃ ص ۲۱

சுட்டெரிக்கும் வட்டமான சூரியனின் வெயிலிலே அல்லது வெண்ணிலவின் வெளிச்சத்திலோ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

நிழல் விழுவதில்லை. என்று புகழ் பெற்ற மேதைஹஜ்ரத் ஷைக் அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவீ (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்.

நூல். மதாரிஜுன் நுபுவ்வத். பாகம் 1. பக்கம் 21.

நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது என்று வாதிடுவோர். தமக்கு ஆதாரமாக புகாரி ஷரீஃப் பாகம் 1 பக்கம் 452லும் - புகாரி ஷரீஃப் தமிழ் மொழியாக்கம் ரஹ்மத் ட்ரஸ்ட் வெளியீடு பாகம் 3 பக்கம் 793-794லிலும் பதிவு செய்யப்பட்ட وكان لا يكتب வகான லாயக்துபு “ நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எழுதக் தெரியாதவர்களாக இருந்தார்கள் என்னும் ஹதீஸை ஆதாரமாக காட்டுகிறார்கள்.

இவர்கள் காட்டக்கூடிய وكان لا يكتب வகான லாயக்துபு என்பதற்கு “ நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எழுதாதவர்களாக இருந்தார்கள்“ என்றுதான் அர்த்தமே தவிர. எழுதத் தெரியாதவர்களாக இருந்தார்கள் என்று மொழியாக்கம் செய்திருப்பது தவறாகும். ரஹ்மத் ட்ரஸ்ட் வெளியீட்டில் இந்த வாசகத்திற்கு தவறாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. வாசகத்திற்கு தவறாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. எழுதாமலிருப்பது வேறு. எழுதத் தெரியாமலிருப்பது வேறு.

அடுத்து. ஹுதைபிய்யா உடன் படிக்கையின் போது ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களிடம். தனது பெயர் இருக்குமிடத்தைக் கேட்டார்கள். புகாரி பாகம் 1. பக்கம் 452. நபிகளார் அவர்களுக்கு எழுத படிக்கத் தெரியாது என்பதால்தான் அலீ (ரலி) அவர்களிடம் காட்டும்படி கேட்டார்கள் என நபிக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று ஒரு கூட்டம் கூறுகிறது.

ஒரு நூலில் அல்லது ஒரு பேப்பரில் முக்கிய செய்தி ஒன்றை ஒருவர் படித்துக் கொண்டிருக்கும் போது எங்கே? அதைக்காட்டுங்கள் என்று நாம் அவரிடம் சொல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் அப்படிச் சொன்னதால் நமக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்று அர்த்தம் ஆகிவிடுமா? இல்லையே. அதுப்போல்தான் மேற்கண்ட ஹதீதின் விளக்கமும் ஆகும்.

அடுத்து - நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். தமது பெயரை முத்திரையாக செய்து வைத்து கடிதங்களின் இறுதியில் முத்திரை பதிப்பார்கள். அடிக்கடி முத்திரையிட்டதால் தமது பெயர் இப்படித்தான் இருக்கும் என்பதை புரிந்து ஹுதைபிய்யாவில் நபி அவர்கள் எழுதியிருக்கலாம் என்றும் மறுப்பாளர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

இந்த விளக்கம் ஏற்கத்தக்கதன்று. ஏனெனில் முத்திரையைப் பார்த்துதான் தனது பெயரை எழுதத் கற்றுக் கொண்டார்கள் என்றால்.முத்திரையை செய்து கொடுத்தவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அந்தரங்கத்தில் ஆசிரியராகவல்லவா ஆகிவிடுகிறார்.

அண்ணல் நபி அவர்களுக்கு அல்லாஹ்வைத் தவிர வேறாரும் ஆசிரியர் இல்லையே. எனவே மறுப்பாளர்களின் மேற்படி விளக்கம், தங்கத் திருமேனி தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தரத்தை குறைப்பதாக இருப்பதால் இவ்விளக்கம் ஒதுக்கித் தள்ளப்படுகிறது.

قل هل يستوي الذين يعلمون والذين لا يعلمون

அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா ? என்று அல்லாஹ் கேட்கிறான். அல்குர்ஆன் 39:9

அண்ணல் எம்பெருமானார், அஹ்மதெங்கள் கோமான் ஹஜ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எழுதவும் படிக்கவும் அறிந்தவர்கள். அறியாதவர்களல்ல.

وعن معاوية رضي الله عنه قال قال رسول الله صلى الله عليه وسلم
من يرد الله به خيرا يفقهه في الدين وإنما أنا قاسم والله يعطي

யாருக்கு அல்லாஹ் நலவை நாடுகின்றானோ அவருக்கு மார்க்கத்தில் இறைவன் விளக்கத்தை வழங்குகிறான்.(அனைத்தையும்) நானே பங்கு வைக்கிறேன். அல்லாஹ் கொடுக்கிறான்.
(அறிவிப்பு - ஹஜ்ரத் முஆவியா (ரலி). நூல்.புகாரி ஷரீப், பக்கம் 16)

மேற்கண்ட நபிமொழியின்படி எல்லாவற்றையும் இறைவன் கொடுக்கிறான்.அவற்றை நபிகள் பங்கு வைக்கிறார்கள் என்றால் எழுத்து மற்றும் படிப்பு கலைகளையும் அவர்கள் தானே நமக்கு பங்கு வைக்கிறார்கள். பங்கு வைக்கக்கூடியவர்களுக்கு அக்கலைகள் எவ்வாறு தெரியாது போகும். ஏந்தல் நபிகளாருக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது என்று சொல்வோர் இந்த ஹதீஸை நன்றாக சிந்தித்து சிந்தையில் மனனம் செய்து கொள்ளவும்.

ஒருமுறை என் இறைவனை நான் பார்த்தேன். அவன் தனது (குத்ரத் எனும்) கையை எனது நெஞ்சில் வைத்தான். உடனே எல்லா பொருட்களும் என் முன் தோன்றின. அனைத்தையும் நான் அறிந்து கொண்டேன். என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள். அறிவிப்பு : ஹஜ்ரத் மஆத் இப்னு ஜபல் (ரலி) நூல் : திர்மிதி, மிஷ்காத். பக்கம் 72.

மேற்படி நபிமொழியில், அனைத்தையும் நான் அறிந்து கொண்டேன் எனும் வாசகம், ஏந்தல் நபிகளாருக்கு எழுதத் தெரியும் என்பதை சுட்டிக்காட்டுவதை சிந்திப்போர் புரிந்துக் கொள்வர். வஸ்ஸலாம்.

الله ورسوله أعلم

அல்லாஹ்வும் அவனது ரஸூலும் மிக அறிந்தவர்கள்.

وآخر دعوانا أن الحمد لله رب العالمين

السلام عليكم ورحمة الله وبركاته